மீகா

Sword of the Spirit

- மீகா - பொருள் - யேகோவா தேவனுக்கு ஒப்பானவர் யார்?
- மொரேசா என்ற ஊரிலிருந்து வந்தவர். .(யூதாவின் தென்மேற்கிலுள்ள ஊர்)
- காலம் :: கி.மு.737 - 696
- மீகா வின் காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள், ராஜாக்கள்::

தீர்க்கதரிசி	யூதாவின் ராஜா	இஸ்ரவேலின் ராஜா
ஆமோஸ்	உசியா	இரண்டாம் யெரொபெயாம்
ஓசியா	உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா	இரண்டாம் யெரொபெயாம்
ஏசாயா	உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா	

- மீகா சிறு தீர்க்கதரிசனப் புத்தகங்களுள் 6 ஆம் புத்தகம்.

Sword of the Spirit

வரலாற்றுப் பின்னணி

Sword of the Spirit

- யூதாவின் ராஜாக்களாக இருந்த யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் மீகா தீர்க்கதரிசனம் உரைத்தார் (மீகா 1:1).
- அவருடைய தீர்க்கதரிசனம் சமாரியா மற்றும் எருசலேமைப் பற்றியது.
- சமாரியா வடக்கு இராஜ்ஜியத்தின் (இஸ்ரவேலின்) தலைநகராகவும், எருசலேம் தெற்கு இராஜ்ஜியத்தின் (யூதாவின்) தலைநகராகவும் இருந்தது. அவர் தெற்கு ராஜ்யத்தைச் சேர்ந்தவர் என்றாலும், அவருடைய தீர்க்கதரிசனத்தின் பெரும்பகுதி வடக்கு ராஜ்யத்துடன் தொடர்புடையது.
- யூதா மற்றும் இஸ்ரவேலின் ஜனங்கள், தேவனை விட்டு வழி விலகினார்கள். இரண்டு ராஜ்யங்களின் தலைநகரான எருசலேம் மற்றும் சமாரியா , விக்கிரக வழிபாடுகளின் மையங்களாக இருந்தன. ஏழைகள் ஒடுக்கப்பட்டனர். நியாயப்பிரமாணங்கள் முறையாய் கடைப்பிடிக்கவில்லை.
- பாபிலோனிய சேனைகளால் எருசலேம் அழிக்கப்படுவதற்கு சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் அசீரியா இஸ்ரவேலுக்கும் ,யூதாவுக்கும் விரோதமாக எழும்பியது.

Sword of the Spirit

கி.மு.740	அசீரியா (திக்லாத்பிலேசர்) வடக்கு சிரியா முழுவதையும் கைப்பற்றியது.(உசியா மரணம்)
கி.மு.722	அசீரியா (சல்மனாசர்) இஸ்ரேலுக்கு எதிராக நகர்ந்து, மூன்று ஆண்டு முற்றுகைக்குப் பின்னர், தலை நகர் சமாரியாவைக் கைப்பற்றி ஜனங்களைச் சிறைபிடித்தது.
கி.மு.720	அசீரியா யூதாவின் வடக்கு எல்லை வரை விரிவடைந்தது. எகிப்துடன் , சிரியா மற்றும் நகரங்கள் பலவும் அசீரியாவுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து.
கி.மு.713-711	யூதா (எசேக்கியாவின் கீழ்) எகிப்து, ஏதோம், மோவாப் ஆகியோருடன் சேர்ந்து அசீரியாவுக்கு எதிராக எழுச்சியடைந்தது.
கி.மு.705	பாபிலோனுடன் எசேக்கியாவின் கீழ் யூதா உட்பட பலர் கிளர்ச்சிக்கு வழிவகுத்தனர் (2 இரா.20:12-19; ஏசா.39: 1-4)
கி.மு.701	அசீரியா ராஜாவாகிய சனகெரீப் , சீதோனைத் தோற்கடித்து, பின், எசேக்கியாக்கியாவின் கீழிருந்த யூதாவை பிடித்தான்.(2 இரா 18: 13-16)

Sword of the Spirit

புத்தகத்தின் நோக்கம்

Sword of the Spirit

- வடக்கு இராஜ்ஜியமாகிய இஸ்ரவேல் அசீரியாவால் தாக்கப்பட்ட நேரத்தில் மீகா தீர்க்கதரிசனம் உரைத்தார். தெற்கு இராஜ்ஜியமாகிய யூதா தாக்கப்பட்டாலும், மீகாவின் காலத்தில் அசீரியர்கள் யூதாவை பிடிக்கவில்லை
- வடக்கு இராஜ்ஜியம், இஸ்ரவேல், தேவனை விசுவாசியாமல், உடன்படிக்கையை மீறியதன் காரணமாக வரவிருக்கும் தீர்ப்பைக் குறித்து எச்சரிக்க
- தெற்கு இராஜ்ஜியம், யூதா, தேவ விசுவாசமின்றி, உடன்படிக்கையை மீறியதன் காரணமாக வரவிருக்கும் தீர்ப்பைக் குறித்து எச்சரிக்க
- யூதாவும்,இஸ்ரவேலைப் போலவே கர்த்தருக்கு விரோதமான காரியங்களில் ஈடுபடுவதால் அவர்களும் இஸ்ரேலைப் போலவே நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்பதை உறுதிப்படுத்த
- தேசத்தை ஒழுங்குபடுத்துவதில் தேவ நீதியையும் அன்பையும் வலியுறுத்தப்பட
- தேவன் தம்முடைய ஜனங்களை எதிர்காலத்தில் மீட்டெடுப்பதை உறுதிப்படுத்த
- தாம் தெரிந்து கொண்ட ஜனத்தையும், பூமியின் சகல ஜாதிகளையும் ஆளுகைச் செய்கிறவர் அவர் என்பதை யாவரும் அறிந்து கொள்ள

Sword of the Spirit

புத்தகத்தின் அமைப்பு

Sword of the Spirit

- வரப்போகும் தோல்வி,அழிவு (அதி.1)
  - ஜனங்களின் பாவங்கள் (அதி.2)
    - தீர்க்கதரிசிகளின் பாவங்கள் (அதி.3)
      - கடைசி நாட்களில் மகிமையாக மீட்கப்படுதல் (அதி.4,5)
    - அதிபதிகளின் பாவங்கள் (அதி.6)
  - ஜனங்களின் பாவங்கள் (அதி.7 : 1 - 7)
- வரப்போகும் ஆசீர்வாதங்கள் (அதி. 7:8 - 20)

Sword of the Spirit

- 1:1–2.11 இஸ்ரேலுக்கும் யூதாவிற்கும் பேரழிவு
- 2:12,13 நம்பிக்கையான வார்த்தை
- 3.1–12 ஜனங்களை நடத்துகிறவர்களுக்கு எதிரான கண்டனத்தின் செய்திகள்
- 4.1–5.15 தேவனின் மாறாத அன்பு
- 6.1–7.7 தன் ஜனங்களுக்காக ஏங்கும் தேவன்
- 7.8-20 மனந்திரும்புதலின் விளைவு

Sword of the Spirit

புத்தகத்தின் சுருக்கம்

Sword of the Spirit

அதி.1:1–2.11 (இஸ்ரேலுக்கும் யூதாவிற்கும் பேரழிவு)

- **சமாரியாவுக்கும் (இஸ்ரவேலின் தலை நகரம்), எருசலேமுக்கும் (யூதாவின் தலை நகரம்) விரோதமான கர்த்தருடைய வார்த்தை ::**
  - தம்முடைய பரிசுத்த ஆலயத்திலிருக்கிற ஆண்டவரே, உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருப்பார்.(1:2)
  - அவர் இறங்கி பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பார்.(1:3) *(விக்கிரகங்கள் வணங்கப்பட்டு வந்த இடங்கள்)*
  - அதின் சுரூபங்கள் எல்லாம் நொறுக்கப்படும்; .... அதின் விக்கிரகங்களை எல்லாம் பாழாக்குவேன்.(1:7)
  - நான் இந்த வம்சத்தாருக்கு விரோதமாய்த் தீமையை வருவிக்க நினைக்கிறேன்; ....அது தீமையான காலம்.(2:3)
  - கர்த்தரின் சபையில் சுதந்தரவீதங்களை அளந்துகொடுக்கிறவர்கள் உனக்கு இல்லாதிருப்பார்கள்.(2:5)
  - இது(தேசம்) தீட்டுப்பட்டது, இது உங்களை நாசப்படுத்தும், அந்த நாசம் மிகவும் கொடியதாயிருக்கும்.

Sword of the Spirit

கர்த்தர் தேசங்களுக்கு விரோதமாய் எழும்பக் காரணம் என்ன ???

- இது எல்லாம் யாக்கோபுடைய மீறுதலினிமித்தமும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமும் சம்பவிக்கும்.(1:5)
- தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியினால், விடியற்காலமாகிறபோது அதை நடப்பித்து,.....மனுஷனையும் அவன் சுதந்தரத்தையும் ஒடுக்குகிறார்கள்.(2:1,2)
- என் ஜனங்கள் பூர்வமுதல் சத்துருவைப்போல் *(கர்த்தருக்கு விரோதமாய்)* எழும்பினார்கள். ....அஞ்சாமல் கடந்துபோகிறவர்களுடைய *(அமைதலாய் ஜீவனம் பண்ணுகிறவர்களுடைய)* மேலங்கியையும் வஸ்திரத்தையும் உரிந்துகொண்டீர்கள்.(2:8)
- என் ஜனத்தின் ஸ்திரீகளை *(விதவைகளை)*அவர்களுடைய சௌக்கியமான வீடுகளிலிருந்து துரத்திவிட்டீர்கள்; அவர்களுடைய குழந்தைகளுக்கு இருந்த என் அலங்காரத்தை என்றைக்கும் இல்லாதபடிக்குப் பறித்துக்கொண்டீர்கள்.(2:9)

கற்றுக்கொள்ள வேண்டியது::

மீகா கர்த்தருடைய வார்த்தையை எடுத்துரைத்ததோடல்லாமல் தன் தேசத்துக்கு வரப்போகிற அழிவினிமித்தம் அங்கலாய்க்கிறார்.

★ இதினிமித்தம் நான் புலம்பி அலறுவேன்;.... ஆந்தைகளைப்போல அலறுவேன்.(1:8)

Sword of the Spirit

மீகா குறிப்பிட்டுள்ள . இந்த நகரங்களின் பெயர்களின் பொருளை நாம் அறிந்து கொள்ளும் போது, அது ஒரு விதத்தில் நகரங்களின் எதிர்கால தீர்க்கதரிசனமாகவும் இருக்கிறது என்பதைக் காணலாம்.

- **பெத் அப்ரா ,அப்ரா - புழுதி** =>> புழுதியில் புரளு(10)
- **சாப்பீர் - சௌந்தரியம்** =>> வெட்கத்துடன் ...போ(11)
- **சாயனா - வெளியே செல்** =>> வெளியே வருவதில்லை(11)
- **பெத் ஏசேல் -அருகில் உள்ள பட்டணம்** =>> அடைக்கலமாயிராது(11)
- **மாரோத் - கசப்பு** =>> தீமை கர்த்தரிடத்திலிருந்து வந்தது(12)
- **லாகீச் - குதிரைகளுக்கு** =>> வேகமான குதிரைகளை இரதத்திலே பூட்டு(13)
- **மோர்ஷேத்காத் - திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்ட** =>> உனக்கிருக்கிறதைக் கொடுத்து விடுவாய்(14)
- **அக்சீப் - ஏமாற்றமளிக்கிற** =>> இஸ்ரவேலின் ராஜாக்களுக்கு அபத்தம்(14)
- **மரேஷா - வாரிசு** =>> இன்னும் ஒரு சுதந்தரவாளியை வரப்பண்ணுவேன்(15)

காத் - இஸ்ரவேலின் அழிவை எதிர் நோக்கி இருப்பவர்கள்.

அதுல்லாம் - தாவீது, சவுல் ராஜாவிடம் இருந்து தப்பி ஓடியபோது அவனுக்கு அடைக்கலம் . இஸ்ரவேலர்களிடையே உயர்ந்த மற்றும் வலிமைமிக்கவர்களுக்கு மீண்டும் அடைக்கலம் தரும் இடமாக இருக்கும்,

Sword of the Spirit

மேசியாவின் காலத்திற்கான நம்பிக்கையூட்டும் வாக்குதத்தம்

யாக்கோபின் ஜனங்களே, உங்களெல்லாரையும் நான் நிச்சயமாய்க் கூட்டுவேன், இஸ்ரவேலில் மீதியானவர்களை நிச்சயமாய்ச் சேர்ப்பேன்; போஸ்றாவின் ஆடுகளைப்போல் அவர்களை ஏகக்கூட்டமாக்குவேன், தன் தொழுவத்துக்குள்ளே சேர்ந்த மந்தைக்குச் சமானமாய் ஜனத்திரளினாலே இரைச்சல் உண்டாகும்.(2:12)

தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் *(இயேசு கிறிஸ்து)* உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார், கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார்.(2:13)

Sword of the Spirit

அதி.3:1–12 (ஜனங்களை நடத்துகிறவர்களுக்கு எதிரான கண்டனத்தின் செய்திகள்)

தலைவர்கள்,அதிபதிகள்,

- நன்மையை வெறுத்து, தீமையை விரும்பி, ……, என் ஜனத்தின் சதையைத் தின்று, அவர்கள்மேல் இருக்கிற அவர்களுடைய தோலை உரிந்துகொண்டு, அவர்கள் எலும்புகளை முறித்து, பானையிலே போடும்வண்ணமாகவும் இறைச்சியைக் கொப்பரைக்குள்ளே போடும்வண்ணமாகவும் அவைகளைத் துண்டிக்கிறார்கள்.(2,3)
- நியாயத்தை அருவருத்து, செம்மையானவைகளையெல்லாம் கோணலாக்கி, சீயோனை இரத்தப்பழியினாலும், எருசலேமை அநியாயத்தினாலும் கட்டி..(9,10)
- பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள்; அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள்(11)

ஜனத்தை மோசம்போக்குகிற தீர்க்கதரிசிகள்,

- பணத்துக்குக் குறிசொல்லுகிறார்கள்(11)
- தங்கள் பற்களினால் கடிக்கிறவர்களாயிருந்து, சமாதானமென்று சொல்லி, தங்கள் வாய்க்கு உணவைக்கொடாதவனுக்கு விரோதமாகச் சண்டைக்கு ஆயத்தம்பண்ணி, என் ஜனத்தை மோசம்போக்குகிறவர்கள்(5)

Sword of the Spirit

பொய் தீர்க்கதரிசனம் அங்கீகரிக்கப்பட்டது

ஜனங்கள் ஒடுக்கப்பட்டார்கள்

ஜனங்கள் ஒடுக்கப்பட்டார்கள்

Sword of the Spirit

விளைவு ::

- அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள்; ஆனாலும் அவர்கள் தங்கள் கிரியைகளில் பொல்லாதவர்களானபடியினால், அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு கொடாமல், தமது முகத்தை அக்காலத்திலே அவர்களுக்கு மறைத்துக்கொள்ளுவார்.(4)
- தரிசனங்காணக்கூடாத இராத்திரியும், குறிசொல்லக்கூடாத அந்தகாரமும் உங்களுக்கு வரும்; தீர்க்கதரிசிகளின்மேல் சூரியன் அஸ்தமித்து, அவர்கள்மேல் பகல் காரிருளாய்ப் போகும்.(6)
- தரிசனம்பார்க்கிறவர்கள் வெட்கி, குறிசொல்லுகிறவர்கள் நாணி, உத்தரவுகொடுக்கிற தேவன் இல்லாததினால் அவர்கள் எல்லாரும் தங்கள் வாயை மூடுவார்கள்.(7)
- ஆகையால் உங்கள்நிமித்தம் சீயோன் வயல்வெளியைப்போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம், ஆலயத்தின் பர்வதம் காட்டுமேடுகளாய்ப்போம்.(12)

Sword of the Spirit

அதி.4:1–5:15 (தேவனின் மாறாத அன்பு)

1000 வருட அரசாட்சி::

- கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடிவருவார்கள்.(1)
- அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று.(4)

பாபிலோனிலிருந்து விடுதலை ::

சீயோனுக்கு விரோதமாக சத்துருக்கள் தப்பெண்ணங்கொண்டிருக்கிறார்கள்.தேவனோ தம் ஜனங்கள் மேல் வத்துள்ள அன்பினிமித்தம் அவர்களை மீட்பார்.

- சீயோன் தீட்டுப்படுவாளாக, எங்கள் கண் அவளைக் காண்பதாக என்று சொல்லி, அநேக ஜாதியார் உனக்கு விரோதமாகக் கூடியிருக்கிறார்கள்.(11)
- ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய நினைவுகளை அறியாமலும், அவருடைய யோசனையை உணராமலும் இருக்கிறார்கள்...(12)
- பாபிலோன் வரைக்கும் போவாய். அங்கே விடுவிக்கப்படுவாய்; அங்கே கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்.(10)

Sword of the Spirit

இயேசு கிறிஸ்துவைக் குறித்தான தீர்க்கதரிசனம்

- சேனைகளையுடைய நகரமே, இப்போது தண்டுதண்டாகக் கூடிக்கொள்; நமக்கு விரோதமாக முற்றிக்கை போடப்படும்; இஸ்ரவேலுடைய நியாயாதிபதியைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள்.(5:1)
- எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது.(5:2)
- இவரே சமாதான காரணர்;......(5:5)

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஜனங்கள்

- யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப்போலவும்,......., பூண்டுகள்மேல் வருகிற மழைகளைப்போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்.(5:7)........ சிங்கம் காட்டுமிருகங்களுக்குள்ளே இருக்கிறதற்குச் சமானமாகவும், ...பாலசிங்கம் ஆட்டுமந்தைகளுக்குள்ளே இருக்கிறதற்குச் சமானமாகவும் ஜாதிகளுக்குள் அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்.(5:8)

★ **செவிகொடாத புறஜாதிகளிடத்திலே கோபத்தோடும் உக்கிரத்தோடும் நீதியைச் சரிக்கட்டுவேன்(5:15)**

Sword of the Spirit

அதி.6:1–7:7 (தன் ஜனங்களுக்காக ஏங்கும் தேவன்)

- என் ஜனமே, நான் உனக்கு என்ன செய்தேன்? நான் எதினால் உன்னை விசனப்படுத்தினேன்? எனக்கு எதிரே உத்தரவு சொல்.(6:3)
- என் ஜனமே, ...சித்தீம் தொடங்கி கில்கால்மட்டும் நடந்தது இன்னதென்றும், நீ கர்த்தருடைய நீதிகளை அறிந்துகொள்ளும்படி நினைத்துக்கொள்.(6:5)
- அவர்களில் ஐசுவரியமுள்ளவர்கள் கொடுமையால் நிறைந்திருக்கிறார்கள்; அவர்களுக்குள் வாசமாயிருக்கிறவர்கள் பொய்பேசுகிறார்கள்; அவர்கள் வாயிலுள்ள நாவு கபடமுள்ளது.(6:12)

மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.(6:8)

- **கர்த்தருடைய சத்தம் நகரத்தை நோக்கிக் கூப்பிடுகிறது.**(6:9)

Sword of the Spirit

ஆகையால் நான் உன் பாவங்களினிமித்தம் உன்னை அடித்துப் பாழாக்குகிறதினால் உன்னை பலட்சயமாக்குவேன்.(6:13)

......கர்த்தருக்கு அவர் ஜனத்தோடே வழக்கு இருக்கிறது; இஸ்ரவேலோடே அவர் வழக்காடுவார்.(2)

மீகா தீர்க்கதரிசியின் அங்கலாய்ப்பு ::

- ஐயோ! உஷ்ணகாலத்துக் கனிகளைச் சேர்த்து, திராட்சப்பழங்களை அறுத்தபின்பு வருகிறவனைப்போல் இருக்கிறேன்; புசிக்கிறதற்கு ஒரு திராட்சக்குலையும் என் ஆத்துமா இச்சித்த முதல் அறுப்பின் கனியும் இல்லை.(7:1)

- தேசத்தில் பக்தியுள்ளவன் அற்றுப்போனான்; மனுஷரில் செம்மையானவன் இல்லை; அவர்களெல்லாரும் இரத்தஞ்சிந்தப் பதிவிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் சகோதரனை வலையிலே பிடிக்க வேட்டையாடுகிறான்.(7:2)

- மகன் தகப்பனைக் கனவீனப்படுத்துகிறான்; மகள் தன் தாய்க்கு விரோதமாகவும், மருமகள் தன் மாமிக்கு விரோதமாகவும் எழும்புகிறார்கள்; மனுஷனுடைய சத்துருக்கள் அவன் வீட்டார்தானே.(7:6) *(இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தை சீஷர்களுக்கு மேற்கோள் காட்டினார் -- மத் 10 :36)*

வ்

Sword of the Spirit

நானோவென்றால் கர்த்தரை நோக்கிக்கொண்டு, என் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன்; என் தேவன் என்னைக் கேட்டருளுவார்.(7:7)

Sword of the Spirit

Sword of the Spirit

அதி.7:8-20 (மனந்திரும்புதலின் விளைவு)

- என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்.(7:8)
- நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்; அவர் எனக்காக வழக்காடி என் நியாயத்தை விசாரிக்குமட்டும் அவருடைய கோபத்தைச் சுமப்பேன்; அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டுவருவார், அவருடைய நீதியைப் பார்ப்பேன்.(7:9)
- உன் மதில்களை எடுப்பிக்கும் நாள் வருகிறது; அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம்.(7:11)
- தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபைசெய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார்.(7:18)
- அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்.(19)

Sword of the Spirit

Reference :

1. பரிசுத்த வேதாகமம்

2. https://www.chabad.org/library/article_cdo/aid/112061/jewish/The-Prophet-Micah.htm

3. https://www.ttb.org/resources/study-guides/micah-study-guide

4. https://www.studylight.org/commentary/micah

5. https://www.bible-studys.org/Bible%20Books/Micah/Micah%20Chapter%207.html

6. https://www.biblesociety.org.uk/explore-the-bible/bible-book-club/micah

7. https://amazingbibletimeline.com/blog/micah/

8. Study Guide for Micah by David Guzik - Blue Letter Biblewww.blueletterbible.org ›
   StudyGuide2017-Mic ›

Sword of the Spirit

தேவனுக்கே மகிமை

Sword of the Spirit